**கூடுதல் மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்**

முன்னிலை : திருமதி.G.ரேஷ்மா, பி.எஸ்.சி., பி.எல்.,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்.

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 27 ஆம் தேதி திங்கள்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.362/2019**

(CNR No. TNPB02-009643-2019)

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
பெரம்பலூர் காவல் நிலையம்,
குற்ற எண்.193/2019 ... குற்ற முறையீட்டாளர்

**/எதிர்/**

சம்ஷாத், 28/2019,
க/பெ. ஹாலித்பாட்ஷா,
ஜமாலியா நகர், குலத்தான் மேடு,
லப்பைக்குடிகாடு,
குன்னம் தாலுகா,
பெரம்பலூர் மாவட்டம்.

... எதிரி

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 07.04.2021ம் தேதியிட்ட R.O.C.No.814/2020/ RG /F1 ன் படி இவ்வழக்கில் கீழ்க்கண்ட விவரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.)

| வ. எண் | பொருள் | விவரம் | |
|---|---|---|---|
| 1. | குற்றம்சாட்டப்பட்டவர் / எதிரி நீதிமன்ற காவலில் வைக்கப்பட்ட காலம் | (எதிரி நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டார்) | |
| | | காவலில் வைக்கப்பட்ட தேதி | விடுவிக்கப்பட்ட தேதி |
| | | 16.03.2019 | 10.04.2019 |
| 2. | நீதிமன்றத்தில் புகார்/இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | 10.10.2019 | |
| 3. | அமர்வு நீதிமன்றத்திற்கு வழக்கினை சமர்ப்பித்த தேதி | இல்லை | |
| 4. | குவிமுச பிரிவு 240 இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரிடம் / எதிரியிடம் விசாரிக்கப்பட்ட தேதி | 01.06.2026 | |
| 5. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட | 1. Crl.M.P.No.1723/2019, 10.04.2019 | |



RESHMA Judicial Magistrate, Additional Mahila Court Digitally signed by RESHMA Location: Perambalur Date: 2026.07.27 19:05:43 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | அனைத்து மனுக்களின் (குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தவிர) மீதான உத்தரவு விபரம் (இந்நீதிமன்றத்தில் உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டில் மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய உத்தரவு உட்பட) | 2. Crl.M.P.No.1363/2019, 21.03.2019<br><br>3. M.P.No.2/2026, 26.05.2026 | | |
| 6 | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதி | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 08.06.2026 | 08.06.2026 |
| | | அ.சா.2 | 08.06.2026 | 08.06.2026 |
| | | அ.சா.3 | 16.06.2026 | 16.06.2026 |
| | | அ.சா.4 | 16.06.2026 | 16.06.2026 |
| | | அ.சா.5 | 15.07.2026 | 15.07.2026 |
| | | அ.சா.6 | 21.07.2026 | 21.07.2026 |
| | | அ.சா.7 | 21.07.2026 | 21.07.2026 |
| 7 | எதிரியிடம் குவிமுச பிரிவு 313(1)(b)-இன் கீழ் வினா வினவப்பட்ட தேதி | 24.07.2026 | | |
| 8. | எதிரி தலைமறைவு குறித்த விபரம் மற்றும் எதிரி ஆஜர்படுத்தப்பட்ட/ தோன்றிய விபரம் | தலைமறைவு ஏதும் இல்லை. | | |
| 9. | இவ்வழக்கில் மேலமை நீதிமன்றம் பிறப்பித்த தடை உத்தரவு ஏதேனும் இருப்பின் அது குறித்த விவரம் | தடை உத்தரவு ஏதும் இல்லை | | |

இவ்வழக்கானது 24.07.2026 ஆம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது அரசுத் தரப்பில் கற்றறிந்த கூடுதல் குற்றவியல் பொது வழக்கறிஞர் திரு. சுரேஷ் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர்கள்.E. சிவராமன், S. ராமன் அவர்கள் முன்னிலையாகியும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

**<u>தீர்ப்புரை</u>**

**<u>அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

1. இவ்வழக்கின் வாதி ஜெரினாபேகம் கடந்த 16.03.2019ம் தேதி மதியம் 1.00 மணிக்கு அவரது உறவினரின் துக்க காரியத்திற்கு செல்ல வேண்டி அவரது வீட்டை



RESHMA Judicial Magistrate, Additional Mahila Court Digitally signed by RESHMA Location: Perambalur Date: 2026.07.27 19:05:48 +0530

பூட்டிவிட்டு சென்ற சமயம் எதிரி வாதியின் வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே சென்று பீரோவில் வைத்திருந்த(1) 2 ¼ பவுன் நெக்லஸ், (2) கல் வைத்த தோடு இரண்டு ஜதை (4 தோடுகள்) சுமார் 1 ¼ பவுன், (3) கம்ப்யூட்டர் தோடு ஒரு ஜதை (2 தோடுகள்) சுமார் ½ பவுன் (4) மூக்குத்தி ஒரு ஜதை (2) சுமார் ஒரு கிராம் ஆகமொத்தம் 4 பவுன் ஒரு கிராம் தங்க நகைகளை ரூ.80,000/- மதிப்புள்ளதை தான் ஆதாயம் அடைய வேண்டும் என்றும் வாதிக்கு நஷ்டத்தை உண்டுபண்ண வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் திருடிய எதிரியின் செய்கையானது 454, 380 இ.த.ச பிரிவுகளின் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக பெரம்பலூர் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 207 இன் கீழ் நகல் வழங்குதல்</u>

2. இந்நீதிமன்றத்தால் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, இந்நீமன்றத்தில் முன்னிலையான எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 207 இன்படி அரசுத் தரப்பில் வழக்கு ஆவணங்களின் நகல்களை இலவசமாக வழங்கப்பட்டது.

<u>குற்றச்சாட்டுக்கள் வனைந்து குற்றம் பற்றி வினவுதல்</u>

3. எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, எதிரி மீது இ.த.ச. 454, 380 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து குற்றங்கள் குறித்து, வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்து குற்றவாளி இல்லை எனவும் வழக்கு விசாரிக்கபட வேண்டும் என்று கோரியதால் வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

<u>அரசுத் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விவரம்</u>

4. அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 சான்றுபொருளும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

<u>அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் :-</u>

5. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 ஜெரினாபேகம் தனது நீதிமன்ற சாட்சியத்தில் சுமார் 5 வருடங்களுக்கு முன்பு பாடாலூர் கிராமத்தில் உள்ள உறவினர் வீட்டிற்கு காலையில் தான் தனது கணவர் மற்றும் உறவினர்களுடன் தங்களது வீட்டை பூட்டி விட்டு சென்றுவிட்டேன் என்றும் மதியத்திற்கு மேல் வீட்டிற்கு வந்த


RESHMA Judicial Magistrate, Additional Mahila Court Digitally signed by RESHMA Location: Perambalur Date: 2026.07.27 19:05:54 +0530

போது வீட்டின் கதவிலிருந்து பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது என்றும் வீட்டிற்குள் சென்று பார்த்தபோது பீரோ திறந்து கலைக்கப்பட்டிருந்தது என்றும் பீரோவில் வைத்திருந்த நகைகள் திருட்டு போயிருந்தது என்றும் பீரோவில் தான் வைத்திருந்த தோடு, நெக்லஸ் மற்றும் மாட்டல் ஆகியவை திருட்டு போயிருந்தது சுமார் 4 1/2 பவுன் இருக்கும் என்றும் அதன் மதிப்பு சுமார் 70,000 ரூபாய் மதிப்பு இருக்கும் என்றும் இது குறித்து தனது அக்கா மகன் நாசரிடம் சொன்னேன் என்றும் போலிசார் தகவல் தெரிந்து வீட்டிற்கு வந்தார்கள் என்றும் இது குறித்து தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும் புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும் புகார் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் நான்கு மாதங்கள் கழித்து தங்கள் வீட்டில் திருட்டு போன நகைகளை கண்டுபிடித்ததாக போலிசார் சொன்னதின் பேரில் தான் காவல் நிலையம் சென்று நகைகளை அடையாளம் காட்டினேன் என்றும் மேற்படி நகைகள் நீதிமன்றத்தில் மனுப்போட்டு பெற்றுக் கொண்டேன் என்றும் தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகைகள் தான் தங்கள் வீட்டில் திருட்டுப்போனது என்றும் மேற்படி புகைப்படும் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் நகைகளை யார் திருடினார்கள் என்று தனக்கு தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரித்தனர் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6. அ.சா.2 முஹம்மது நாசர் தனது சாட்சியத்தில் அ.சா.1 தனது சித்தி என்றும் சுமார் 5 வருடங்களுக்கு முன்பு தான் வெளியிலிருந்த போது அ.சா.1 தனக்கு போன் செய்து வீட்டின் பூட்டை உடைத்து பீரோவில் வைத்திருந்த நகைகளை யாரோ திருடிச் சென்றதாக தகவல் சொன்னார் என்றும் தகவல் தெரிந்து தான் அ.சா.1ன் வீட்டிற்கு சென்று பார்த்தேன் என்றும் சுமார் 5 பவுன் திருட்டு போயிருந்ததாக தெரிந்து கொண்டேன் என்றும் யார் திருடினார்கள் என்று தனக்கு தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் கூறி அரசு தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகிவிட்டார்.

7. அ.சா.3 செந்தில்குமார் தனது சாட்சியத்தில் அ.சா.1 தங்கள் தெருவில் தான் குடியிருந்து வருகிறார் என்றும் அவர் வீட்டில் திருட்டு போனது பற்றி தனக்கு தெரியும் என்றும் யார் திருடினார்கள் என்பது தனக்கு தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகிவிட்டார்.

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court Digitally signed by RESHMA Location: Perambalur Date: 2026.07.27 19:06:00 +0530

8. அ.சா.4 யாஷானுல்லா தனது சாட்சியத்தில் அ.சா.1 தங்கள் பக்கத்து வீட்டில் தான் குடியிருந்து வருகிறார் என்றும் எதிரியை தனக்கு தெரியாது என்றும் போலிசார் தன்னிடம் காவல் நிலையம் சென்றபோது கையெழுத்து வாங்கினார்கள் என்றும் தன்னிடம் காட்டபப்படும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும் அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகிவிட்டார்.

9. அ.சா.5 சின்னசாமி காவல் உதவி ஆய்வாளர்(ஓய்வு) கடந்த 16.03.2019ம் தேதி பெரம்பலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது பெரம்பலூர் வட்டம், குரும்பலூர் கிராமம், பள்ளிவாசல் தெருவில் வசிக்கும் அப்துல் ஹக்கீம் மனைவி ஜரினாபேகம் என்பவர் வீட்டிலிருந்து உறவினர் இறப்பிற்கு சென்ற போது ஆஜர் எதிரி அவருடைய வீட்டின் பூட்டை உடைத்து அவர் வீட்டு பீரோவில் வைத்திருந்த நகைகளை திருடியதாகவும் அவற்றின் மதிப்பு 80,000/- இருக்குமென்றும் சொல்லி வீட்டில் திருடிய ஆஜர் எதிரியையும் திருடப்பட்ட வழக்கு சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து ஆஜர் படுத்தினார்கள் என்றும் புகார்தாரர் கொடுத்த புகாரைப் பெற்று பெரம்பலூர் காவல் நிலைய குற்ற எண் 193/2019 , இதச பிரிவுகள் 457, 380ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் 16.03.2019ம் தேதி 18.15 மணிக்கு புகார்தாரர் ஆஜர்படுத்திய எதிரியின் மீது வழக்கு பதிவு செய்து சம்பவயிடம் சென்று பார்த்ததில் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் எதிரியை 19.30 மணிக்கு கைதிற்கான காரணம் கூறி கைது செய்து எதிரியின் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தும் ஆஜர் எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதனை சாட்சிகள் நிஷாத்பாபு, யாசானுல்லா ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன் என்றும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும் படிவம் 91 அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

1. நெக்லஸ் ஒன்று சுமார் $2^{1/4}$ பவுன்

2. கல் வைத்த தோடு 2 ஜதை (4 தோடுகள்) சுமார் $1^{1/4}$ பவுன்

3. கம்ப்யூட்டர் தோடு 1 ஜதை (2 தோடுகள்) சுமார் $1^{1/2}$ பவுன்

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court Digitally signed by RESHMA Location: Perambalur Date: 2026.07.27 19:06:07 +0530

4. மூக்குத்தி 1 ஜதை (2 எண்ணிக்கை) சுமார் 1 கிராம் ஆகியவற்றை தான் படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும் மேற்படி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும் எதிரியை தக்க பாராவசம் ஒப்படைத்து அடைப்பு காவலுக்கு தக்க வழிக்காவல் மூலம் அனுப்பி வைத்தேன் என்றும் மேற்படி நகைகளை புகார்தாரர் மனு செய்து பெற்று கொண்டுவிட்டார் என்றும் அதன்பிறகு அன்றைய தினம் 19 மணிக்கு சம்பவயிடம் சென்று அங்கிருந்த சாட்சிகளான அமீன், தரீம் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதி அதில் உள்ள விவரங்களை மேற்படி சாட்சிகளுக்கு படித்துக் காட்டிய பிறகு அவர்களிடம் கையெழுத்து பெற்று அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும் அவைகள் முறையே பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது என்றும் பின்னர் சாட்சிகள் ஜெரினாபேகம், முகம்மது நாசர், ராமச்சந்திரன், செந்தில்குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும் இறுதியாக புலன் விசாரணை முடித்து எதிரி மீது 28.09.2019 ம் தேதி பிரிவுகள் இதச. 454, 380 ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் தெரிவித்துள்ளார்.

10. அ.சா.6 ராமச்சந்திரன் அ.சா.1 யை தனக்கு தெரியாது என்றும் வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் அவர் வீட்டில் திருட்டு போனது பற்றி தனக்கு தெரியாது என்றும் யார் திருடினார்கள் என்பது தனக்கு தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகிவிட்டார்.

11. அ.சா.7 கரீம் தனது சாட்சியத்தில் அ.சா.1 யை தனக்கு தெரியும் என்றும் வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும் அதில் உள்ள விவரங்கள் தனக்கு தெரியாது என்றும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகிவிட்டார்.

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court Digitally signed by RESHMA Location: Perambalur Date: 2026.07.27 19:06:14 +0530

**குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 313 (1) (ஆ)இன் கீழ் வினவுதல்**

12. அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிக்கு பாதகமாக அமைந்துள்ள சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.தொ. பிரிவு 313 (1) (ஆ)இன் கீழ் எதிரியிடம் விளக்கிக் கூறி வினவியபோது எதிரி அவற்றை மறுத்துரைத்துள்ளார். மேலும் எதிரி தனது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்து எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**அரசுத் தரப்பு வாதம்**

13. அரசுத்தரப்பு வழக்கறிஞர் அவர்களால் அ.சா.1 முதல் அ.சா.7 சாட்சிகள் மூலமும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் மூலமும், அ.சா.பொ.1 சான்று பொருள் மூலமும் எதிரிகள் மீதான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, சாட்சியங்களின் அடிப்படையில் எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

**எதிரி தரப்பு வாதம்**

14. இதனை மறுத்து எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகியோர் பிறழ் சாட்சி ஆகிவிட்டார்கள் என்றும், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் யாரும் அளிக்கவில்லை என்றும், எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்து உத்தரவிட வேண்டும் என்று வாதிட்டார்.

15. இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**தீர்வு**

16. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது. கடந்த 16.03.2019ம் தேதி மதியம் 1.00 மணிக்கு வாதி அவரது உறவினரின் துக்க காரியத்திற்கு சென்றிருந்த சமயம் எதிரி வாதியின் வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே சென்று பீரோவில் வைத்திருந்த சுமார் 4 பவுன் மற்றும்

ஒரு கிராம் தங்க நகைகள் ரூ.80,000/- மதிப்புள்ள நகைகளை திருடிச் சென்றார் என்று அரசுத் தரப்பு வழக்கு அமைந்துள்ளது. எதிரி தரப்பில் வழக்கில் சொல்லப்பட்டுள்ள குற்றங்கள் எதையும் எதிரி செய்யவில்லை என்றும், அரசுத் தரப்பு வழக்கானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே, எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இருதரப்பு வாதங்களின் அடிப்படையில் பின்வருமாறு எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு தீர்வு காணப்படுகிறது.

**<u>எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள, இ.த.ச. 454, 380 பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டு குறித்து பரிசீலனையும் தீர்வும் :</u>**

17. எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. 454, 380 பிரிவுகளின் கீழ் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்து பார்க்கையில், புகார்தாரரான அ.சா.1 ஜெரினாபேகம் அளித்த அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில், "வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்து வெளியில் வந்த சுமார் 40 வயது மதிக்கத்தக்க பர்தா போட்ட பெண் வருவதைப் பார்த்து பொது மக்கள் அவரை சுற்றி வளைத்து விசாரித்தனர் என்றும், அவர் சுமார் ரூ.80,000/- மதிப்புள்ள நகைகளை திருடியதை ஒப்புக்கொண்டார் என்றும் பொதுமக்கள் உதவியுடன் அவரையும் அவர் திருடிய நகைகளையும் தங்களிடம் காவல் நிலையத்தில் ஆஜர் செய்கிறோம்" என்று குறிப்பிட்டுள்ள நிலையில்

18. அ.சா.1 ஜெரினாபேகம் தனது சாட்சியத்தில், பாடாலூர் கிராமத்தில் உள்ள உறவினர் வீட்டிற்கு காலையில் நான் எனது கணவர் மற்றும் உறவினர்களுடன் எங்களது வீட்டை பூட்டி விட்டு சென்றுவிட்டேன் என்றும் மதியத்திற்கு மேல் வீட்டிற்கு வந்த போது வீட்டின் கதவிலிருந்து பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது என்றும் வீட்டிற்குள் சென்று பார்த்தபோது பீரோ திறந்து கலைக்கப்பட்டிருந்தது என்றும் பீரோவில் வைத்திருந்த நகைகள் திருட்டு போயிருந்தது என்றும் சாட்சியமளித்துள்ள நிலையில்,

அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில்,

**"எனது வீட்டில் திருடு போனனது சம்மந்தமாக யார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும், என்னிடம் கையெழுத்து வாங்கிய புகாரில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம்**

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court Digitally signed by RESHMA Location: Perambalur Date: 2026.07.27 19:06:25 +0530

**எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும் புகார் யார் எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்"** என்று புகார் வாக்குமூலத்திற்கும் முதல் நிலை சாட்சியத்திற்கும் முற்றிலும் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார், இதிலிருந்து அ.சா.1–புகார்தாரரின் சாட்சியத்தின் மீது சந்தேகத்தை ஏற்படுகிறது.

19. மேலும், சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட அ.சா.2, அ.சா.3 மற்றும் அ.சா.6 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியம் ஆகியுள்ளார்கள் அவர்களை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போதும் அரசு தரப்பு வழக்கத்திற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்பது தெரிய வருகிறது.

20. இந்நிலையில் பொதுவாக திருட்டு குற்றம் தொடர்பாக பொருளை பறி கொடுத்தவரை தவிர சம்பவத்தை நேரடியாக பார்த்த வேறு சாட்சிகள் யாரும் இல்லாத நிலையில் எதிரியிடமிருந்து திருடுபோன பொருள் எவ்வாறு கைப்பற்றப்பட்டது என்பதும் கைப்பற்றப்பட்ட பொருளும், திருடுபோனதாக சொல்லப்படும் பொருளும் எதிரியுடன் எவ்வாறு தொடர்பு படுத்தப்பட்டுள்ளன என்பதை அரசு தரப்பில் நிரூபித்திருக்கப்படவேண்டும். இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.4 மற்றும் அ.சா.6, அ.சா.7 சாட்சிகளான எவரும் சம்பவத்ததை பார்க்கவில்லை என்ற நிலையில் அரசு தரப்பில் கொள்ளையடிக்கப்பட்டதாக சொல்லப்படும் அ.சா.1ன் நகையை எதிரியிடமிருந்து எவ்வாறு கைப்பற்றப்பட்டது, எவ்வாறு எதிரியின் வசம் அந்நகை சென்றடைந்தது என்பதை தொடர்புபடுத்தி அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை காண்கையில் இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரியின் ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.4 யாஷானுல்லா தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரியை தெரியாது என்றும் தன்னிடம் காட்டப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.ஆ.3, 2 வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும் காவல் நிலையத்திற்கு சென்றபோது கையெழுத்து வாங்கினார்கள் என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகியுள்ளதும், அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோதும், மேற்படி சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை என்பதும் தெரியவருகிறது.

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court Digitally signed by RESHMA Location: Perambalur Date: 2026.07.27 19:06:31 +0530

21. மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் எதிரி தான் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்பதை அ.சா.4 ன் சாட்சியம் எதிரிகயையும், புகைப்படத்தில் உள்ள காணாமல் போன அ.சா.பொ.1–தங்க நகைகளையும் தொடர்புபடுத்துவதில் தோல்வியடைந்து விட்டதாகவும் அரசு தரப்பில் போதுமான சாட்சிய சான்றாவணங்கள் அடிப்படையில் நிரூபிக்க தவறியுள்ளதாகவும், இந்நீதிமன்றம் கருதுகிறது.

22. அதே நேரத்தில் அரசு தரப்பில் எதிரியிடமிருந்து பெறப்பட்டதாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் முறையாக சாட்சிகளின் முன்னிலையில் பெறப்படவில்லை என்பதும், அந்த வகையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்ததாக சொல்லப்படும், அ.சா.ஆ.3, ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் எதிரியால் கொள்ளையடிக்கப்பட்டதாக சொல்லப்படும் அ.சா.பொ.1 தங்க நகைகள் எதிரியிடமிருந்து தான் கைப்பற்றபட்டது என்பதை அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

23. மேலும் அ.சா.5 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டுமேக் கொண்டு அரசு தரப்பு வழக்கை நிரூபித்து விட்டதாக கருத முடியாது. இந்நிலையில் அ.சா.5–ன் மூலம் குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ.4 முதல் அ.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் நம்பகத்தன்மையை இதர சாட்சிகள் மூலம் அரசு தரப்பில் உறுதிப்படுத்தாத நிலையில் மேற்படி ஆவணங்கள் ஏற்கத்தக்கதாக இல்லை என்றும் இந்நீதிமன்றம் கருதியும் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5–ன் சாட்சியத்திற்கு எவ்வித முக்கியத்துவமும் அளிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

24. மேற்கண்ட விரிவான பரிசீலனையின் அடிப்படையில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கபடவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதனடிப்படையில் எதிரி மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

25. முடிவில், எதிரி மீதான இ.த.ச. 454, 380 பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டினை அரசுத் தரப்பில் தகுதிநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1) இன் கீழ் எதிரியை மேற்கண்ட குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்து

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court Digitally signed by RESHMA Location: Perambalur Date: 2026.07.27 19:06:36 +0530

இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. மேலும், எதிரி எழுதிக் கொடுத்துள்ள பிணையப் பத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் ஆர்.பி.எண். 6/2019 ல் தாக்கல் செய்துள்ள வழக்குச் சொத்தான புகைப்படத்தில் உள்ள 1. நெக்லஸ் ஒன்று சுமார் 2 $^{1/4}$ பவுன்

2. கல் வைத்த தோடு 2 ஜதை (4 தோடுகள்) சுமார் 1 $^{1/4}$ பவுன்

3. கம்ப்யூட்டர் தோடு 1 ஜதை (2 தோடுகள்) சுமார் 1 $^{1/2}$ பவுன்

4. மூக்குத்தி 1 ஜதை (2 எண்ணிக்கை) சுமார் 1 கிராம் ஆகியவற்றை குற்றப்பல்வகை மனு எண்.3531/2019 நாள்:29.04.2019 தேதியிட்ட உத்தரவு மூலம் புகார்தாரரான ஜெரினாபேகம் இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளார். மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு மேற்குறிப்பிட்ட வழக்குச் சொத்துக்களை புகார்தாரர் ஜெரினாபேகம் வசமே வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை.III க்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைத் திருத்தம் செய்யப்பட்டு, 27.07.2026 ஆம் நாளான இன்று அவையறியப் பகரப்பட்டது.

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court Digitally signed by RESHMA Location: Perambalur Date: 2026.07.27 19:06:42 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.

**I. அரசுத் தரப்பு சாட்சிகள் :-**

1. அ.சா.1 ஜெரினாபேகம்
2. அ.சா.2 முஹம்மது நாசர்
3. அ.சா.3 செந்தில்குமார்
4. அ.சா.4 யாஷானுல்லா
5. அ.சா.5 சின்னசாமி, காவல் உதவி ஆய்வாளர்(ஓய்வு)
6. அ.சா.6 ராமச்சந்திரன்
7. அ.சா.7 கரீம்

**II. அரசுத் தரப்பு சான்றாவணங்கள் :-**

1. அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம்
2. அ.சா.ஆ.2 புகைப்படம் பார்வைமகஜர்
3. அ.சா.ஆ.3 ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையொப்பம்
4. அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை
5. அ.சா.ஆ.5 படிவம் 91

6. அ.சா.ஆ.6 பார்வை மகஜர்

7. அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம்

8. அ.சா.ஆ.8 பார்வை மகஜரிலுள்ள 2 வது கையொப்பம்

**III. அரசுத் தரப்பு சான்று பொருள் :-**

அ.சா.பொ.1 – CD உடன் கூடிய புகைப்படம்.

**IV.எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்று பொருள் :-** இல்லை

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.07.27 19:06:48 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.

குறிப்பு

1. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்கள்.
2. எந்த சாட்சியும் 3 வாய்தாவுக்கு மேல் விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

As per Rule 106 of Criminal Rules of Practice

| S. No. | Name of the Police station | Description of the accused | | Date of | | Explanation of Delay |
|---|---|---|---|---|---|---|
| 1. | Peramalur PS, Cr.No.193/2019, U/S. 454, 380 IPC | Name | Samsath | Occurrence | 16.03.2019 | Witness summons not served. Witness are not Produced on time by Prosecution side. |
| | | Husband's Name | Halith Basha | Complaint | 16.03.2019 | |
| | | Occupation | Labourar | Apprehension | 16.03.2019 | |
| | | Residence | Jamaliya Road, Kulathan Medu, Labbaikudikadu, Kunnam Taluk, Perambalur District. | Release on bail | 10.04.2019 | |
| | | Age | 28/2019 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 08.06.2026 | |
| | | | | Closure of Trial | 21.07.2026 | |
| | | | | Sentence or Order | 27.07.2026 | |

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court Digitally signed by RESHMA Location: Perambalur Date: 2026.07.27 19:06:54 +0530

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.

Judicial Form No.61 (See Rule 106)
IN THE COURT OF THE ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

JUDGMENT IN CALENDAR CASE NO. 362/2019

ON THE FILE OF THE ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

Complainant Jerinabegam
Accused Samsath, W/o.Halith Basha

Offence U/S. 454, 380 IPC
Findings Acquitted
Sentence --

| Sl. No. | Description of the Accused | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **Name** | **Father's/ Husband's Name** | **Caste or race** | **Occupation** | **Residence** | **Age** |
| 1. | Samsath | Halith Basha | Female | Labourar | Labbaikudikadu | 28/2019 |

| Date of | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **Occurance** | **Complaint** | **Apprehension or Appearance** | **Release on bail** | **Commencement of trail** | **Closure of trial** | **Sentence or Order** | **Explanation of Delay** |
| 16.03.2019 | 16.03.2019 | 16.03.2019 | 10.04.2019 | 08.06.2026 | 21.07.2026 | 27.07.2026 | Witness summons not served. Witness are not Produced on time by Prosecution side. |

RESHMA
Judicial Magistrate,
Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.07.27 19:07:00 +0530

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.